IN THE COURT OF THE SUBORDINATE JUDGE, METTUR
MCOP.No.17/2023

Deposition of RW2 witness of Respondent solemnly affirmed by Bench Clerk in OP Section of this court in accordance with the provisions of Oaths Act 1969 (Act 44 of 1969) on 14.11.2025

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | செல்வசேரன் | **Caste** | : | |
| **S/o.** | : | மயில்வாகனன் | **Calling** | : | |
| **Village** | : | | **Religion** | : | |
| **Taluk** | : | | **Age** | : | |

**முதல் விசாரணை :-**

நான் இந்த மனுவில் 3-ம் எதிர்மனுதாரர் ஆவேன். என் தரப்பு சாட்சியத்தை நிரூபண பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். பிரமாண வாக்குமூலத்தில் கண்டுள்ள சங்கதிகளை படித்துப்பார்த்து அவைகள் யாவும் உண்மை என தெரிந்து கையெழுத்து செய்தேன். அதிலுள்ள கையெழுத்து என்னுடையது தான். என்னுடைய அறிவுரையின் பேரில்தான் என்னுடைய வழக்கறிஞரால் அது தயார் செய்யப்பட்டது. பின்வரும் ஆவணங்களை என் தரப்பு சான்று ஆவணங்களாக குறியீடு செய்ய வேண்டுகிறேன்

| S.No. | Date | Documents | Remarks |
|---|---|---|---|
| எ.ம.சா.ஆ.4 | - | TN -43-M-5811 (Bajaj Pulsar)-;ன் பாலிசி | சான்றிட்ட நகல் |
| எ.ம.சா.ஆ.5 | 10.11.25 | Lawyers Notice | நகல் |
| எ.ம.சா.ஆ.6 | 11.11.25 | Receipts | அசல் |

**மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

விபத்து நடந்த சமயத்தில் காப்பீடு நடைமுறையில் இருந்தது என்றால் சரிதான். விபத்து சமயத்தில் எதிர்மனுதாரருக்கு ஒட்டுநர் உரிமம் இல்லை என்பதால் எங்கள் நிறுவனம் மனுதாரருக்கு செலுத்திவிட்டு பின்னர் எதிர்மனுதாரரிடம் வசூலித்துவிட வேண்டும் என்றால் சரியல்ல. நான் சொல்வது தவறு என்றாலும், உச்சநீதிமன்ற தீர்ப்பின்படி மனுதாரருக்கு உரிய இழப்பீடு செய்ய எங்கள் நிறுவனம் கடமைப்பட்டவர்கள் என்றால் சரியல்ல. 01.04.2022-ம் தேதியிட்ட சட்டத்திருத்தம்

தற்போது உச்சநீதிமன்றத்தால் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அது ஆறு மாத காலதாமதத்தை பொறுத்து மட்டும் வழங்கப்பட்டுள்ளது. தற்போதைய சட்ட நிலைக்கு ஏற்ப நான் மனுதாரருக்கு இழப்பீடு வழங்கியே ஆக வேண்டும் என்றால் உச்சநீதிமன்றத்தின் இறுதி உத்தரவிற்காக போடப்பட்டுள்ளதால் தற்போதைய நிலைக்கு நாங்கள் இழப்பீடு செலுத்த வேண்டிய அவசியம் இல்லை.

ஒம்/–செல்வசேரன்

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/–ஆர்.சரவணபாபு,
சார்பு நீதிபதி,
மேட்டுர்.